கால நீட்டிப்பு செய்தும், இப்பணியில் 33 விழுக்காடு பணிகளே, ஒப்பந்ததாரர் IVRCL நிறுவனத்தால் முடிக்கப்பட்டன. எனவே ஒப்பந்த விதிகளின்படி, 30—9—2014—ல் இந்த நிறுவனத்திற்கான ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. அதுபோல, மீதமுள்ள பணிகளைச் செயலாக்கும் பொருட்டு, மறு ஒப்பந்தப்புள்ளி 18—12—2014 அன்று இறுதி தேதியிட்டு கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கு, IVRCL நிறுவனத்தினர், நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டார்கள். 18—12—2014 அன்று இடைக்கால தடை பெற்றதால், ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படவில்லை. இடைக்காலத் தடை 18—3—2014 அன்று விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, 25—3—2015—ல் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, 28—1—2016 அன்று பணியாணை வழங்கப்பட்டது. இத்திட்டப் பணிகள் அனைத்தும் தற்போது முடிக்கப்பட்டு, சோதனையோட்டத்தில் உள்ளன. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பொற்கரங்களால் விரைவில் திறக்கப்படவுள்ளது என்பதையும், மக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாகக் கொண்டு வரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்மூலம், 5 இலட்சத்து 98 ஆயிரம் மக்களுக்கு, நாளொன்றுக்கு 21 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஊ) சோழிங்கநல்லூர் தொகுதி, பெத்தேல் நகர் பகுதியில் உள்ள கருவேலி மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. எஸ். அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஈஞ்சம்பாக்கம் கிராமத்தில் பெத்தேல் நகர் என்கின்ற பகுதியில் சர்வே எண் 282/1, 2, 3 கருவேலி மேய்க்கால் புறம்போக்கு 32 ஆண்டுகளாக 3,000 குடும்பங்கள் வசித்து வருகின்ற இடத்தில் இன்றைக்கு அவற்றை அப்புறப்படுத்துகின்ற ஒரு நிலை, ஒரு பரப்பரப்பான சூழல் அங்கே நிலவிக் கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் அந்த கருவேலி நிலங்களையெல்லாம் கிராம*

நத்தங்கள் என்று நிலத்தின் தன்மையை மாற்றி அவர்களுக்கு பட்டா வழங்கலாம் என்று 2010—ல் தமிழக அரசால் அரசாணை வெளியிடப்பட்டு, அதன் மூலமாக நம்முடைய சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுவும் அதனை ஆய்வு செய்து, அதன்மூலம் இவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கலாம் என்கின்ற நிலை உருவாகியிருக்கிறது. அந்த இடங்கள் வனத் துறையாலும், வருவாய்த் துறையாலும் சதுப்பு நிலம் இல்லை என்று உறுதி செய்யப்பட்டும், இன்றைக்கு அவர்களையெல்லாம் அப்புறப்படுத்துகின்கிற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சோழிங்கநல்லூர் வட்டம், ஈஞ்சம்பாக்கம் கிராமம், சர்வே எண் 282/2—ல் கிராம கணக்குகளிலே வகைப்பாடு மேய்க்கால் எனவும், சர்வே எண் 282/3—ல் கிராம கணக்குகளிலே வகைப்பாடு கல்லுளி எனவும் தாக்கல் ஆகியுள்ளது. மேற்கண்ட இரு புலங்களிலும் உள்ள நிலங்கள் அரசு புறம்போக்கு நிலங்களாக இருந்து வருகின்றன. மேலும் இப்பொருண்மை தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். மேற்படி வழக்கின்மீது நடவடிக்கை தொடர்ந்த நிலையில் மனுதாரர் மீண்டும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண் 1874/2018, கடந்த 2018 முதல் நடைபெற்று வருகிறது. 22—1—2019 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்களை உள்ளடக்கிய ஆய்வுக் கூட்டத்தில் ஆக்கிரமிப்பு வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக விவாதிக்கப்பட்டு, மேற்படி ஆக்கிரமிப்புகளில் உள்ளவர்களை உடனடியாக அப்புறப்படுத்தி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் பெரும்பாக்கம் பகுதியில் தற்காலிகமாகக் குடியமர்த்தி சர்வே எண் 282/2 மேய்க்கால் வகைப்பாட்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல அது வகைப்பாடு மாற்றம் செய்து அந்தப் புலத்திலே அரசிடம் உரிய அனுமதி பெற்று, புதிய

2019 ஜூலை 18] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

பன்னடுக்கு குடியிருப்பு ஏற்படுத்தி நிரந்தரமாகக் குடியமர்த்தலாம் என அதிகாரிகள் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து மேற்படி பகுதியில் வசிக்கும் குடியிருப்புவாசிகளைக் கணக்கெடுக்கும் பணிக்காகவும் மற்றும் மறு குடியமர்வு பணிக்காகவும் ரூ.9,50,89,320/– தொகை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அளிக்க அரசிடம் கோரப்பட்டு, சம்பந்தப்பட்ட கோப்பும் தற்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு குறிப்புக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த வழக்கு நிலுவையிலே இருந்தபோதிலும்கூட மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அந்த ஏழையெளிய மக்களுக்காக மாற்று ஏற்பாடுகளை செய்து தருவதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(எ) நாகர்கோவில் தொகுதி, அழிக்கால் கிராமம், கடலரிப்பைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.

முற்பகல் 11–45

***திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், என்னுடைய நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அழிக்கால் மீனவ கிராமத்தில் ஆண்களும், பெண்களும் இரவில் தூங்காமல் கண்விழித்துக்கொண்டு வாழ்வா, சாவா என்ற அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த அளவிற்கு கடலரிப்பு ஏற்பட்டு, அனைத்து வீடுகளும் கீழே விழக்கூடிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கின்றன. 3 தினங்களுக்கு முன்பாக கிழக்குத் தெருவில், ரைமன்டு என்று சொல்லக்கூடிய 55 வயது மீனவர் ஒருவர், வீடு இடிந்து கால் முறிவுற்று உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அவர்களுக்கு அரசின் சார்பாக நிதி உதவி வழங்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுகுறித்து மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை